# மேட்டுப்பாளையம் நகராட்சி

28.12.2018ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

1. மேட்டுப்பாளையம் நகராட்சியில் ஆணையர் அவர்களது பயன்பாட்டிற்கு புதிய Scorpio (S11 2WD 140 BHP BS4) ஈப்பினை ரூ.14.00 லட்சம் மதிப்பீட்டில் வாங்கிக் கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
(ந.க.எண்.3322/2018/இ1)
**தீர்மானம் எண் :** 155
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

2. இந்நகராட்சிப் பகுதியில் உள்ள 16 இடங்களில் தானியங்கி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு டெண்டர் கோருவதற்கு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. டெண்டர் போடுவதற்கு Ravi Publicity Service என்ற நிறுவனம் மூலம் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காண் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்க்கண்டவாறு Ravi Publicity Service நிறுவனத்திற்கு வழங்குவதற்கு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Ravi Publicity Service, Chennai | Rs.55,283.00 |
| 2. | Ravi Publicity Service, Chennai | Rs.86,625.00 |

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
(ந.க.எண்.3372/2018/இ1)
**தீர்மானம் எண் :** 156
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

3. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.எண். 40 –3711ன் டயர்கள் தேய்ந்துள்ளதாலும் மேலும் இவ்வாகனத்தின் பேட்டரி பழுதடைந்துள்ளதாலும் வாகனத்தை இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே இவ்வாகனத்திற்கு தேவையான புதிய டயர்கள் மற்றும் பேட்டரி ஆகியவற்றை வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ. 65,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.4411/2018/எச்1)
**தீர்மானம் எண் :** 157
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

4. மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியிலுள்ள மகாதேவபுரம் நலசங்கம் நகராட்சிக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு எண். IA No 571/2018 OS No. 268/ 2018 ல் நகராட்சி சார்பாக வழக்கினை ரூ. 7500/—ஐ நகராட்சி வழக்கறிஞர் திரு. செந்தில் குமார் B.Com BL அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மானம் எண் :** 158
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

5. இந்நகராட்சி பொத சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.38z – 4571 தகுதி சான்றிதழ் பெற பழுது பார்க்கும் பணிக்கு கடந்த 12.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர் ஆர்.சி.சேகர் இன்ஜினியரிங் & ைஉறடுராலிக்ஸ், ஈரோடு | ரூ. 1,06,400/— |
| 2. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டர் ஓர்க்ஸ், ஈரோடு | ரூ. 78,900/— |

மேற்காண் ஒப்பந்தப்புள்ளிகயில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஓர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.3117/2018/எச்1)

**தீர்மானம் எண் :** 159
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

6. மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2018—19ன் கீழ் 12.12.2018 தேதியன்று கீழ்க்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 14 தொண்டுப்பட்டி சாலை பழைய காவல் நிலையம் அருகில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 1.10 | M/s. ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன் | 0.04% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | M/s. ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்ப்ராஸ்டரக்ஸர் | 3.50% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2. | வார்டு எண்.16 எம்.எஸ். ஆர். புரம் பொது கழிப்பிடத்தில் பழுது பார்த்தல் மற்றும் மராமத்து பணி செய்தல் | 1.45 | M/s. ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன் | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | M/s. ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்ப்ராஸ்டரக்ஸர் | 0.87% மதிப்பீட்டிற்கு அதிகம். |

| | |
|---|---|
| | மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1க்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியாக 0.04% மதிப்பீட்டிற்கு அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளதனையும் வ.எண்.2ல் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு 0.06% குறைவாக கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளையும் ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண் :** 160<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 7. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான குப்பைகிடங்கில் உள்ள குப்பைகளின் அளவுகளை Digital Survey மேற்கொண்ட அளவுகள் மற்றும் அதற்கான வரைபடங்கள், Bio– Mining – கருத்துருக்கள் சமர்ப்பிக்க தேவைப்படுகின்றன. இதனையடுத்து இப்பணிக்கான உத்தேச செலவினம் ரூ. 40,000/–க்கு மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண் :** 161<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |